**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

**MCOP.No. 121/2023**

**RW.1.**

*****

2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 10- ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1983 ம் ஆண்டின் 105-வது சட்டம் ஏற்பாட்டின் படி திருமதி.S. மோகன ரம்யா., பி.ஏ., பி.எல்., தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : Suryapriya | **தகப்பனார் பெயர்** | : நல்லசிவம் |
| **கிராமம்** | : | **தாலுகா** | : மதுரை |
| **தொழில்** | : உதவியாளர் வட்டார போக்குவரத்து அலுவலகம் சிவகங்கை | **வயது** | : 38/2026 |

---

**முதல் விசாரணை**

**22.07.2026**

நான் தற்போது சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் வட்டார போக்குவரத்து அலுவலர் சாட்சியம் அளிக்க சாட்சி சம்மன் சார்பு ஆகி உள்ளது. அவர் சார்பாக என்னை சாட்சியம் அளிக்குமாறு அங்கீகார கடிதம் வழங்கி உள்ளார். அது **எ.ம.சா.ஆ.1** ஆகும். எங்களது அலுவலத்திற்கு வந்த சமூக நீதிமன்ற அழைப்பாணையில் TN 16 E5460 என்ற நான்கு சக்கர TATA ACE வாகனத்தின் தகுதி சான்று, பதிவு சான்று, காப்பீட்டு சான்று ஆகியவற்றை கோரியும் தாவா விபத்து சமயம் ஓட்டிச்சென்ற பிரிட்டோ ஜான்சன் த.பெ. இருதய ராஜ்,35-321 சொர்ணவள்ளி நகர், காளையார்கோவில் , சிவகங்கை மாவட்ட என்ற நபரின் ஓட்டுநர் உரிமம் சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் கோரியிருந்ததது. மேற்கண்ட 4 சக்கர வாகனத்தின் பதிவு சான்றானது

15.03.2019 தேதியில் வழுங்கப்பட்டுள்ளது, இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பதிவு சான்று புதிபிக்கபடவேண்டும். . மேற்படி பதிவு சான்று **எ.ம,சா.ஆ. 2** ஆகும். மேற்கண்ட வாகனத்தின் தகுதி சான்றானது 15.03.2019 வழுங்கப்பட்டுள்ளது, 8 ஆண்டுகளுக்கு பிறகு ஒவ்வோரு வருடமும் தகுதி சான்றை புதிபிக்கவேண்டும். முதல் 8 ஆண்டுகளில் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை தகுதி சான்று புதிபிக்கபடவேண்டும். மேற்படி தகுதி சான்று **எ.ம.சா.ஆ. 3** ஆகும். மேற்கண்ட வாகனத்தின் காப்பீட்டு சான்றானது 23.02.2019 முதல் 31.03.2027 தேதி வரை காப்பீடு தொடர்ச்சியாக பெறப்பட்டுள்ளது. மேற்படி காப்பீட்டு சான்று **எ.ம.சா.ஆ. 4** ஆகும். மேற்சொன்ன எ.ம.சா.ஆ,. 2 முதல் எ.ம.சா.ஆ. 4 வரையிலான ஆவணங்கள் 11.05.2023 விபத்து தேதிக்கு உட்பட்டது என்றால் மேற்படி வாகனத்திற்கான தகுதி சான்று மட்டும் விபத்து தேதியில் அமலில் இல்லை. மேற்சொன்ன TATA ACE வாகனத்திற்கு தகுதி சான்று 24.03.2023 தேதி வரை அமலில் இருந்தது. அதன் பிறகு 18.05.2023 தேதியில் தான் தகுதி சான்று புதிப்பிக்கபட்டது. மேற்சொன்ன TATA ACE வாகனம் சரக்கு வாகனம் என்றும் பொதுபயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் வாகனம் என்றால் சரிதான்.

TN 16 E5460 என்ற நான்கு சக்கர TATA ACE வாகனத்தின் ஓட்டுநர் ஆன பிரிட்டோ ஜான்சன் ஓட்டுநர் உரிமம் சம்பந்தபட்ட ஆவணங்களை நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். அது முறையே **எ.ம.சா.ஆ. 5** ஆகும். எ.ம.சா.ஆ. 5 ன் படி 11.05.2023 தேதியில் திரு. பிரிட்டோ ஜான்சன் அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. விபத்து தேதியில் TATA ACE வாகனத்தை ஓட்டுவதற்கு பிரிட்டோ ஜான்சன் அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் அமலில் இருந்தது. விபத்து தேதியில் TATA ACE வாகனத்தின் ஓட்டுநராக திரு. பிரிட்டோ ஜான்சன் என்றும் அதன் உரிமையாளர் திரு. தம்ராபில் செபிஸ்தின் என்றால் சரிதான்.

VVIP

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

11.05.2023 தேதியில் TN 16 E5460 பதிவு எண் கொண்ட TATA ACE - வாகனத்திற்கு முறையே காப்பீடு இருந்தது என்றால் சரிதான். மேற்படி தேதியில் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் TATA ACE - வாகனத்திற்கு முறையே காப்பீடு உள்ளது என்றும் ஆகையால் 2 ம் எதிர் மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமை பட்டவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

(sd/- S.Mohana Ramya)
**தலைமைக் குற்றவியல் நடுவர்,**
**சிவகங்கை.**

Copy